புதுவை, உழவர்கரை நகராட்சிகளில்

# புத்தாண்டு கேளிக்கை வரி வசூல் பன்மடங்கு அதிகம்

## அதிகாரிகள் தகவல்

புதுச்சேரி, ஜன. 1: புதுச்சேரியில் நடைபெற்ற புத்தாண்டு கேளிக்கை நிகழ்ச்சி மூலம் அரசுக்கான வருவாய் கடந்தாண்டை விட பல மடங்கு அதிகம் வசூலானதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பிரெஞ்சு பாரம்பரிய மிக்க புதுச்சேரி சிறந்த சுற்றுலா தளமாக விளங்குகிறது. இதனால் தமிழகம், கேளரா, கர்நாடகா உள்ளிட்ட பல்வேறு இடங்களிலிருந்து வாரவிடுமுறை நாட்களில் ஆயிரக்கணக்கான சுற்றுலா பயணிகள் வந்து செல்கின்றனர். இது தவிர புத்தாண்டு கொண்டாட்டமும் ஆண்டுதோறும் கோலாகலமாக கொண்டாடப்படுவது வழக்கம். பாட்டு, நடனம், மது விருந்து, அசைவ விருந்து, இசைகச்சேரி, நகைச்சுவை, வண்ணமயமான நிகழ்ச்சிகள் என புதுவையே களைகட்டி காணப்படும்.

அதன்படி, புத்தாண்டை (2018) கொண்டாட புதுவையில் உள்ள நட்சத்திர ஓட்டல்கள், கடற்கரை சொகுசு பங்களாக்கள், விடுதிகளில் உள்ள அனைத்து அறைக

டிக்கெட் விலையில் 3ல் ஒரு பங்கில் 45 சதவீதம் வரியாக செலுத்த வேண்டும். அதாவது ஒரு டிக்கெட் விலை ரூ.3 ஆயிரம் என்றால், அதில் மூன்றில் ஒரு பங்கு ரூ.1000 ஆகும். இதில் வரியாக ரூ.450 செலுத்த வேண்டும்.

இந்த வரி விதிப்பு கடந்தாண்டை விட அதிகம் என்பதால், சில நட்சத்திர ஓட்டல்களில் கேளிக்கை நிகழ்ச்சிகளை ரத்து செய்யப்பட்டன. அதே நேரத்தில் புல்வார் மற்றும் கடற்கரையோரம் உள்ள

> கடந்த புத்தாண்டில் கேளிக்கை வரியாக ரூ.4 லட்சம் வரை வசூலானது. ஆனால், தற்போது வரி உயர்வால் ரூ.15 லட்சம் வரை வருவாய் கிடைத்துள்ளது.

இதேபோல் பல்வேறு ஓட்டல்களில் நடைபெற்ற கேளிக்கை நிகழ்ச்சிகளில் குறைந்தபட்சம் ரூ.1,000 (சைவ விருந்து) முதல் அதிகபட்சம் ரூ.6,000 வரை டிக்கெட் விலை நிர்ணயிக்கப்பட்டிருந்தது. இதன் மூலம் நகராட்சிக்கு கூடுதல் வருவாய் கிடைத்துள்ளது.

புதுச்சேரி நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் சுமார் 15 ஓட்டல்களில் கேளிக்கை நிகழ்ச்சி நடத்த அனுமதி வழங்கப்பட்டிருந்து. இங்கு கடந்த புத்தாண்டில் கேளிக்கை வரியாக ரூ.4 லட்சம் வரை வசூலானது.

ஆனால், தற்போது வரி உயர்வால் ரூ.15 லட்சம் வரை வருவாய் கிடைத்துள்ளது. இதேபோல் உழவர்கரை நகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் இந்தாண்டு 7 ஓட்டல்களில் கேளிக்கை நிகழ்ச்சி நடத்த உரிமம் வழங்கப்பட்டிருந்தது. இதன்மூலம் இந்தாண்டு புதுச்சேரி, உழவர்கரை நகராட்சிகளுக்கு கேளிக்கை வரி மூலம் ரூ.22 லட்சத்துக்கு மேல் வருவாய் கிடைத்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

### வரி உயர்வால் கேளிக்கை நிகழ்ச்சி ரத்து

புதுவையில் இந்தாண்டு சில ஓட்டல்களில் கேளிக்கை நிகழ்ச்சிகள் கடைசி நேரத்தில் ரத்து செய்யப்பட்டன. இதுகுறித்து ஓட்டல் உரிமையாளர் ஒருவர் கூறுகையில், புத்தாண்டை முன்னிட்டு சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் கேளிக்கை நிகழ்ச்சி நடத்த 150 டிக்கெட் ஏற்பாடு செய்திருந்தோம். வரி அதிகம் காரணமாக கடைசி நேரத்தில் நிகழ்ச்சியை ரத்து செய்துவிட்டோம். மேலும் மது பிரியர்களுக்காக உயர்தரமான புதிய வகை மது பானங்களையும் விற்பனை செய்ய ஏற்பாடு செய்திருந்தோம். இந்நிலையில் மது விற்பனை வரியும் அதிகரிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு இரவு 11 மணியிலிருந்து 12 மணி வரை மது விற்பனை செய்ய ரூ.2500 கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது. ஆனால் இந்தாண்டு ரூ.5000 நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதனால் மது விற்பனை நேரத்தையும் குறைத்து கொண்டோம் என்றார்.

Scanned by CamScanner

# குப்பை குவிப்பு விவகாரத்துக்கு இந்தாண்டுக்குள் தீர்வு

## கவர்னர் கிரண்பேடி உறுதி



புதுச்சேரி, ஜன. 3: தொடர்ந்து குவிக்கப்படும் குப்பை பிரச்னைக்கு இந்தாண்டுக்குள் தீர்வு ஏற்படும் என கிரண்பேடி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

குருமாம்பேட் குப்பை கிடங்கில் தினமும் 400 மெட்ரிக் டன் குப்பைகள் குவிக்கப்படுகிறது. மறு சுழற்சி செய்யாததால், மலைபோல் குவிந்து வருவதாகவும், அரசே மறுசுழற்சி நிறுவனத்தை ஆரம்பித்தால் அரசுக்கு வருவாய் கிடைக்கும் என தினகரன் நாளிதழில் நேற்று முன்தினம் செய்தி வெளியானது.

இதனை மேற்கோள் காட்டி கவர்னர் கிரண்பேடி சமூக வலைதளத்தில் கூறியிருப்பதாவது: புதுச்சேரியில் குப்பைகள் குவிக்கப்படும் விவகாரம் நீண்டகாலமாக கிடப்பில் கிடக்கிறது. இந்த தாமதம் தவிர்த்திருக்க வேண்டியதுதான். சரியான நேரத்தில் முடிவு எடுக்காததால், அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டு வருகிறது. இத்தகைய சூழலில் வருவாயை பெருக்க வேண்டியது மிகவும் தேவையானது. இதற்கு நேர்மையாக தொழில்நுட்ப ரீதியிலான முடிவுகளை நாம் எடுக்க வேண்டும். இது புதுச்சேரி மக்களின் நலனுக்காக தேவைப்படுகிறது. கழிவுகள் செல்வமாக மாற்றப்படாவிட்டால் பொலிவுறு நகரமாக புதுச்சேரி இருக்காது.

எவ்வித காலதாமதமின்றி இந்தாண்டு குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் இந்த பிரச்னைக்கு தீர்வு ஏற்படும் என்பதில் சந்தேகமில்லை. இதற்காக பொதுமக்களும் நகராட்சி, தூய்மை பணிக்கு ஒத்துழைக்க வேண்டும். தங்கள் வீடுகளில் சேகரிக்கப்படும் குப்பைகளை வீட்டுக்கு வெளியே வடிகால் மற்றும் வாய்க்கால்களில் வீசக்கூடாது.

கழிவு நீர் குழாய்களை கட்டணம் செலுத்தி பாதாள சாக்கடையுடன் இணைத்துவிட்டால் சுற்றுச்சூழல் மாசுபடாது. தூய புதுச்சேரியுடன் எதிர்வரும் பொங்கலை கொண்டாட வேண்டும். புதுச்சேரியில் சுற்றுலாவுக்கு என கடற்கரை காவல்பிரிவை தொடங்கியிருப்பது வரவேற்கத்தக்கது. ஒவ்வொரு துறையும் இது போன்ற புது முயற்சிகளை எடுக்க வேண்டும். ராஜ்நிவாஸ் சார்பில் குழந்தைகளுக்கான கலை மற்றும் கைவினை கண்காட்சியை நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளார்.

Scanned by CamScanner

## பிரபலமாகும் ஸ்வச்சதா அப்

# 4 நாட்களில் 40 புகார்கள் பதிவு

## உழவர்கரை நகராட்சி தகவல்

புதுச்சேரி, ஜன. 6: உழவர்கரை நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் குப்பை அகற்றுவது தொடர்பாக ஸ்வச்சதா செயலியில் கடந்த 4 நாட்களில் 40 புகார் வந்துள்ளது. அதன் அடிப்படையில் நகராட்சி அதிகாரிகள் உடனுக்குடன் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

புதுவையில் ஸ்வச்சதா கார்ப்பரேஷன் என்ற தனியார் நிறுவனம் குப்பைகளை அகற்றும் பணியை மேற்கொண்டு வருகிறது. இருப்பினும் பல்வேறு இடங்களில் குப்பைகள் சரிவர அகற்றப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டு இருந்து வருகிறது. இந்நிலையில் நகரங்களில் தூய்மையை உறுதி செய்யும் பொருட்டு, குப்பைகள் அகற்றப்படாதது மற்றும் கழிப்பறை பிரச்னைகள் போன்ற புகார்களை தெரிவிக்க ஸ்வச்சதா அப் என்ற புதிய செயலியை மத்திய நகர்புற மேம்பாட்டு அமைச்சகம் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு அறிமுகப்படுத்தியது. நாடு முழுவதும் உள்ள நகரங்களில் இந்த அப் வழியாக பொதுமக்கள் புகார்களை தெரிவித்து வருகின்றனர்.

இதன் ஒரு பகுதியாக, புதுவை நகராட்சியில் கடந்த 2016ம் ஆண்டு இறுதியில் ஸ்வச்சதா அப் அறிமுகம் செய்யப்பட்டது.

### 'ஸ்வச்சதா அப்பில் புகார் செய்வது எப்படி?

ஸ்மார்ட் போனில் உள்ள கூகுல் பிளே ஸ்டோரில் ஸ்வச்சதா எம்ஔஎச்யுஏ ஜனகிரகா (swachhata - mohua – janaagraha) என்று டைப் செய்ய வேண்டும். பின்னர் கைப்பேசியில் தெரியும் அப்பை (app) டவுன் லோடு செய்ய வேண்டும். தொடர்ந்து, 'அப்' மூலம் குப்பை அகற்றாதது, கழிவு நீர் தேங்கி நிற்பது உள்ளிட்ட பிரச்னைகளை படம் எடுத்து புகார் தெரிவிக்கலாம். அதன் பேரில் நகராட்சி அதிகாரிகள் பிரச்னைக்கு தீர்வு காணுகிறார்கள். நிறைவாக, பிரச்னை சரி செய்யப்பட்டதற்கான படம் எடுத்து புகார்தாரர்களுக்கு அப் மூலம் அனுப்பி வைக்கின்றனர்.

இருப்பினும் பொதுமக்கள் தங்களது புகார்களை நேரடியாக கவர்னருக்கு தெரிவிக்கின்றனர். அதனை நகராட்சி அதிகாரிகளுக்கு கவர்னர் அனுப்பி வைக்கின்றார். அதன் அடிப்படையில் நகராட்சி அதிகாரிகள் குப்பை வாருவது உள்ளிட்ட பிரச்னைகளை சரி செய்து படம் எடுத்து கவர்னருக்கு அனுப்புகின்றனர். இதனால் ஸ்வச்சதா அப்-யின் பயன்பாடு குறைந்து காணப்படுகிறது. இதுவரை சுமார் 80 புகார்கள் மட்டும் அந்த செயலில் பெறப்பட்டுள்ளது. இந்நிலையில் அந்த செயலியை பிரபலப்படுத்தும் வகையில் புதுவை நகராட்சி பல்வேறு இடங்களில் பேனர் வைத்து வருகிறது.

இதற்கிடையே உழவர்கரை நகராட்சியில் ஸ்வச்சதா அப் மூலம் புகார் தெரிவிக்கும் வசதியை கடந்த செப்.15ம் தேதி கவர்னர் கிரண்பேடி துவங்கி வைத்தார். இந்த செயலி அறிமுகமான ஒரு சில வாரங்கள் மட்டும் புகார்கள் குவிந்தன. பின்னர், பொதுமக்கள் ஆர்வம் காட்டாததால் படிப்படியாக புகார்களும் குறைந்தது. குறிப்பாக. செப்.15ம் தேதி முதல் டிச.31ம் தேதி வரை 110 புகார்கள் மட்டும் பெறப்பட்டன.

தற்போது பள்ளி மாணவர்கள் முதல் முதியவர்கள் வரை பலரும் ஸ்மார்ட் போன் உடன் வலம் வருகின்றனர். இந்நிலையில் மீண்டும் ஸ்வச்சதா அப்பை பிரபலப்படுத்தும் வகையில் உழவர்கரை நகராட்சி விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறது. இதன் காரணமாக, கடந்த ஜன.1ம் தேதி முதல் 4ம் தேதி வரை 40 புகார்கள் வந்துள்ளன. இதில் 10 புகார்கள் தீர்க்கப்பட்டதுடன் 15 புகார்களை சரி செய்யும் பணிகள் நடைபெற்று வருகிறது. மீதியுள்ள 10 புகார்கள் உடனே தீர்க்க முடியாத நிலையில் உள்ளன என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து உழவர்கரை நகராட்சி அதிகாரிகள் கூறுகையில், இதுவரை ஸ்வச்சதா அப் மூலம் 150 புகார்கள் வந்துள்ளன. குறிப்பாக, குறிஞ்சி நகர், ரெயின்போ நகர், ரெட்டியார்பாளையம் போன்ற பகுதிகளில் இருந்து அதிகமான புகார்கள் வருகின்றனர். இதில் 42 புகார்கள் தீர்வு காணப்பட்டுள்ளது. 37 புகார்களை சரி செய்யும் பணி நடைபெற்று வருகிறது. மீதியுள்ள 70 புகார்கள் விரைவாக தீர்க்க முடியாத சூழல் உள்ளது. குப்பை அகற்றாதது, இறந்து கிடக்கும் தெருநாய் அகற்றுவது போன்ற புகார்களுக்கு உடனே தீர்வு காணப்படுகிறது. காலிமனை தொடர்பான பிரச்னைகளை தீர்வு காண்பதில் மட்டும் காலதாமம் ஏற்படுகிறது. மேலும் ஸ்வச்சதா செயலில் வரும் புகார்களை காலை, மாலை என இருவேளை பார்த்து நடவடிக்கை எடுக்கிறோம், என்றனர்.

Scanned by CamScanner

# வரி செலுத்த வசூல் மையங்கள் உழவர்கரை நகராட்சி ஏற்பாடு

புதுச்சேரி, ஜன. 17–

உழவர்கரை நகராட்சியில் சொத்து, வீட்டு வரி களை செலுத்த, வசூல் மையங்கள் ஏற்பாடு செய் யப்பட்டுள்ளதாக ஆணையர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்கு றிப்பில் கூறியிருப்பதாவது:

புதுச்சேரி மாநிலத்தில் உள்ள அனைத்து நகராட்சி மற்றும் கொம்யூன் பஞ்சாயத்து ஊழியர்கள், கடந்த சில நாட்களாக ஏழாவது ஊதிய கமிஷன் சம்பள வழங்கக்கோரி, வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனால், பொதுமக்கள் நகராட்சியில் சொத்து வரி, வீட்டு வரி செலுத்த முடியாத நிலை இருந்து வந்தது. இதனை போக்குவதற்காக சொத்து வரி, வீட்டு வரியை செலுத்துவதற்கு, உழவர்கரை நக ராட்சி மூலம், வரி வசூல் மையங்கள் அமைக்கப் பட்டுள்ளது. ஜவஹர் அலுவலகம், வி.வி.பி., நகர் அலுவலகங்களில் நேற்று முதல் இந்த மையங்கள் செயல்படுகின்றனர்.

ஆகையால், பொதுமக்கள் உழவர்கரை நகராட் சிக்கு செலுத்த வேண்டிய சொத்து வரி, வீட்டு வரியை பணம், காசோலை, பற்று அட்டை, கடன் அட்டை மூலம் செலுத்தலாம். ஆன்லைன் மூல மாக இணைய தளத்தில் உள்ள சொத்து வரி என் கிற தலைப்பை கிளிக் செய்து செலுத்தலாம்.

Scanned by CamScanner

# டெபிட், கிரெடிட் கார்டு, ஆன்லைனில் சொத்து வரி செலுத்த வசதி

## உழவர்கரை நகராட்சி ஆணையர் தகவல்

புதுச்சேரி, ஜன. 17: உழவர்கரை நகராட்சியில் டெபிட், கிரெடிட் கார்டு மற்றும் ஆன்லைன் மூலமாக வீட்டுவரி, சொத்துவரியை செலுத்துவதற்கான வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இது குறித்து உழவர்கரை நகராட்சி ஆணையர் ரமேஷ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

கடந்த சில நாட்களாக புதுச்சேரி யூனியன் பிரதேசத்தின் அனைத்து நகராட்சி மற்றும் கொம்யூன் பஞ்சாயத்துக்களின் ஊழியர்கள் 7வது சம்பள ஊதியம் வழங்கக் கோரி வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் பொதுமக்கள், நகராட்சியில் சொத்து வரி, வீட்டுவரி செலுத்த முடியாத நிலை இருந்து வந்தது.

இந்த நிலையை போக்குவதற்காக பொதுமக்கள் தொடர்ந்து அவரவர் சொத்து வரி, வீட்டு வரியை உழவர்கரை நகராட்சியில் செலுத்துவதற்கு ஏதுவாக உழவர்கரை நகராட்சியின் சொத்துவரி வசூல் மையங்களான ஜவகர்நகர் அலுவலகம் மற்றும் விவிபி நகர் அலுவலகம் 16ம் தேதி (நேற்று) முதல் இயங்குகிறது. ஆகையால் பொதுமக்கள், தாங்கள் உழவர்கரை நகராட்சிக்கு செலுத்த வேண்டிய சொத்து வரி, வீட்டு வரியை பண பரிவர்த்தனை, காசோலை, டெபிட் கார்டு, கிரெடிட் கார்டு மூலமாகவும், ஆன்லைன் மூலமாக இணையதளத்தில் உள்ள சொத்துவரி என்கிற தலைப்பை கிளிக் செய்தும் செலுத்தலாம்.

Scanned by CamScanner

# கனகன் ஏரிக்கு வாங்க... ஸ்நாக்ஸ் சாப்பிடுங்க...

புதுச்சேரி, ஜன.21–

சுற்றுலா தலமாக்கப்பட உள்ள கனகன் ஏரியில், கேன்டீன் வசதியை ஏற்படுத்த சுற்றுலா துறைக்கு, கவர்னர் கிரண்பேடி உத்திரவிட்டுள்ளார்.

கவர்னர் கிரண்பேடி கடந்த 3 வார மாக ஒவ்வொரு சனிக்கிழமையும் கனகன் ஏரியை பார்வையிட்டு வருகிறார். தற்போது அங்கு ஏரி புனரமைப்பு பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகின்றன.

நேற்று காலை, மீண்டும் சைக்கிளில் சென்று கனகன் ஏரியை கவர்னர் கிரண்பேடி பார்வையிட்டார். ஒரு வாரமாக நடைபெற்ற பணிகளின் விபரங்களை அதிகாரிகளிடம் கேட்டறிந்தார்.

ஏரியில் ஆகாய தாமரை முழுமையாக அகற்றப்பட்ட நிலையில், வருகிற பிப்ரவரி மாதம் 3ம் தேதி திறப்பு விழா மேற்கொள்வதற்கான பணிகளை மேற்கொள்ள உத்திரவிட்டார்.

ஏரியை பார்வையிட வரும் சுற்றுலா பயணிகளின் வசதிக்காக, அப்பகுதியில் சிறிய கேன்டீன் வசதியை சுற்றுலாத்துறை சார்பில் ஏற்பாடு செய்வது தொடர்பாகவும் அதிகாரிகளுடன் கவர்னர் ஆலோசித்தார். பின்னர் அங்கிருந்து ராஜ்நிவாஸ் சென்றார்.



■ கனகன் ஏரி கவர்னர் ஆய்வுக்கு பின் புதுப்பொலிவு பெற்று வருகிறது. தற்போது கரைகள் சீரமைக்கப்பட்டு பொதுமக்கள் உட்காருவதற்காக இருக்கைகள் அமைக்கப்பட்டு வருகிறது.

Scanned by CamScanner

# கனகன் ஏரியில் கேன்டீன் வசதி
# சுற்றுலாத்துறைக்கு கிரண்பேடி உத்தரவு

**புதுச்சேரி, ஜன. 21:** புதுவையில் சுற்றுலா தலமாக்கப்பட உள்ள கனகன் ஏரியில் கேன்டீன் வசதியை ஏற்படுத்த சுற்றுலாத்துறைக்கு கவர்னர் கிரண்பேடி உத்தரவிட்டுள்ளார்.

புதுவை கவர்னர் கிரண்பேடி கடந்த 3 வாரமாக ஒவ்வொரு சனிக்கிழமையும் கனகன் ஏரியை பார்வையிட்டு வருகிறார். தற்போது அங்கு ஏரி புனரமைப்பு பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன. இந்நிலையில் நேற்று மீண்டும் சைக்கிளில் சென்று கனகன் ஏரியை கவர்னர் கிரண்பேடி பார்வையிட்டார்.



புதுவையில் உள்ள கனகன் ஏரியை கவர்னர் கிரண்பேடி பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அப்போது ஏரிக்கரையோரம் போடப்பட்டிருந்த புதிய சிமெண்ட் கட்டை இருக்கையை பார்வையிட்ட கிரண்பேடி அதில் அமர்ந்தபடி அங்கு கடந்த ஒருவாரமாக நடைபெற்ற பணிகளின் விவரங்களை அதிகாரிகளிடம் கேட்டறிந்தார். ஏரியில் ஆகாய தாமரை முழுமையாக அகற்றப்பட்ட நிலையில், பிப்.3ம்தேதி திறப்பு விழா மேற்கொள்வதற்கான பணிகளை மேற்கொள்ள உத்தரவிட்டார்.

மேலும் ஏரியை பார்வையிட வரும் சுற்றுலா பயணிகளின் வசதிக்காக அப்பகுதியில் சிறிய கேன்டீன் வசதியை சுற்றுலாத்துறை சார்பில் ஏற்பாடு செய்வது தொடர்பாகவும் அதிகாரிகளுடன் கவர்னர் ஆலோசித்தார். பின்னர் அங்கிருந்து கிரண்பேடி புறப்பட்டு ராஜ்நிவாஸ் சென்றார்.

Scanned by CamScanner



கனகன் ஏரியில் ஆய்வு மேற்கொண்ட கவர்னர் கிரண்பெடி அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தியபோது எடுத்த படம்.

# கனகன் ஏரியில் உணவக வசதி

## கவர்னர் கிரண்பெடி ஆலோசனை

புதுச்சேரி, ஜன.21–

கனகன் ஏரியில் உணவகம் அமைப்பது குறித்து கவர்னர் கிரண்பெடி அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

### கவர்னர் கிரண்பெடி

புதுச்சேரி கவர்னர் கிரண்பெடி வார இறுதி நாட்களில் ஒவ்வொரு பகுதியாக சென்று ஆய்வு மேற்கொண்டு வருகிறார். இந்த நிலையில் கடந்த 3 சனிக்கிழமையும் கனகன் ஏரிக்கு சென்று ஆய்வு பணிகள் மேற்கொண்டு வருகிறார். அங்கு தற்போது பராமரிப்பு பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. இந்த நிலையில் நேற்று காலை கவர்னர் கிரண்பெடி மீண்டும் கனகன் ஏரி பகுதிக்கு சென்றார்.

இதற்காக அவர் கவர்னர் மாளிகையில் இருந்து சைக்கிளில் சென்றார். அவருடன் கவர்னர் மாளிகை அதிகாரிகள் உடன் சென்றனர். கனகன் ஏரிக்கு சென்ற அவர் அங்கு இருந்த அதிகாரிகளிடம் கடந்த ஒருவாரமாக நடைபெற்று வரும் பணிகள் குறித்து கேட்டறிந்தார்.

### உணவக வசதி

ஏரியில் இருந்து ஆகாய தாமரை செடிகள் முழுவதுமாக அகற்றப்பட்ட நிலையில் அடுத்த மாதம் (பிப்ரவரி) 3–ந்தேதி பொதுமக்கள் பார்வைக்கு திறக்க தேவையான பணிகளை மேற்கொள்ளும்படி அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். மேலும் அந்த பகுதியில் காவல்துறையினர் ரோந்து பணிக்ளை தீவிரப்படுத்த வேண்டும் என்றும் உத்தரவிட்டார்.

மேலும் அந்த ஏரியை சுற்றிப் பார்க்க வரும் சுற்றுலா பயணிகளின் வசதிக்காக சுற்றுலாத் துறை சார்பில் அந்த பகுதியில் சிறிய உணவகம் வசதி ஏற்படுத்துவது குறித்து அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார். பின்னர் கவர்னர் கிரண்பெடி அங்கிருந்து புறப்பட்டுச் சென்றார்.

Scanned by CamScanner



கவர்னர் கிரண்பெடி கனகனேரியில் ஆய்வு செய்த போது எடுத்த படம். அருகில் அதிகாரிகள் உள்ளனர்.

## விரைவில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணிப்பு:

# கனகனேரியில் மீண்டும் கவர்னர் ஆய்வு

புதுச்சேரி, ஜன.28–

கனகனேரியில் நடைபெறும் பணிகளை கவர்னர் கிரண்பெடி மீண்டும் பார்வையிட்டு ஆய்வு செய்தார். விரைவில் பணிகள் நிறைவேற்றப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு ஏரி அர்ப்பணிக்கப்பட உள்ளது.

## கவர்னர் ஆய்வு

புதுவையில் இருக்கும் போது வார இறுதி நாட்களில் கவர்னர் கிரண்பெடி சுகாதாரம் மற்றும் வளர்ச்சிப்பணிகள் குறித்து ஆய்வு செய்வதை வழக்கமாக கொண்டு உள்ளார். இதன்மூலம் துப்புரவு பணிகள் மற்றும் பொதுமக்களுக்கு தேவையான அத்தியாவசியப்பணிகளை உடனுக்குடன் நிறைவேற்ற அதிகாரிகளுக்கு உத்தரவிட்டு வந்தார். ஏரிகளை பார்வையிட்டு அதனை பராமரிக்கவும் அவர் நடவடிக்கை மேற்கொண்டார்.

இந்தநிலையில் கதிர்காமத்தில் உள்ள கனகனேரியை பார்வையிட்டு தூய்மைப்படுத்தும் பணியில் தீவிர கவனம் செலுத்தினார். வார இறுதி நாட்களில் அவ்வப்போது கனகனேரிக்கு சென்று ஆய்வுப்பணிகளை மேற்கொண்டு வருகிறார். அப்போது கண்டறியப்படும் குறைகளை நிவர்த்தி செய்ய அதிகாரிகளுக்கும் உத்தரவிடுகிறார்.

அதன்படி நேற்று கனகனேரியில் மீண்டும் ஆய்வு செய்தார். அங்கு நடைபாதை அமைக்கும் பணி உள்ளிட்ட பணிகளை பார்வையிட்டார். இந்த ஆய்வின்போது கவர்னரின் கூடுதல் செயலாளர் ஸ்ரீநிவாஸ், பொதுப்பணித்துறை தலைமை பொறியாளர் சண்முகசுந்தரம், கண்காணிப்பு பொறியாளர் சத்தியமூர்த்தி, செயற்பொறியாளர் தாமரை புகழேந்தி, சுற்றுலாதுறை இயக்குனர் முனுசாமி, உழவர்கரை நகராட்சி ஆணையர் ரமேஷ் மற்றும் அதிகாரிகள் உடனிருந்தனர்.

## பாதுகாப்பு-மின்விளக்கு

கனகனேரியில் சமூக பங்களிப்பு திட்டத்தின்கீழ் தனியார் நிறுவனங்கள் பல்வேறு வசதிகளை செய்து தர உள்ளன. பாதுகாப்பு ஏற்பாடுகளை தனியார் வங்கி, மின்விளக்கு வசதிகளை சுற்றுலாத்துறை, அரசு மருத்துவக்கல்லூரி, இருக்கை வசதிகளை அப்பகுதி குடியிருப்போர் நல்வாழ்வு சங்கத்தினரும் செய்து தர முன்வந்துள்ளனர்.

இந்த பணிகள் அனைத்தும் முடிவடைந்து விரைவில் இந்த ஏரி முதல்–அமைச்சர், அமைச்சர்கள், எம்.எல்.ஏ.க்கள் முன்னிலையில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணிக்கப்பட உள்ளது. இதற்காக பாடுபட்ட அதிகாரிகள், சமூக ஆர்வலர்கள், மாணவர்கள், தனியார் நிறுவனங்களை சேர்ந்தவர்களுக்கு கவர்னர் பாராட்டு சான்றிதழ்கள் வழங்க உள்ளார்.

Scanned by CamScanner

# கனகன் ஏரியில் 3ம் தேதி முதல் படகு சவாரி

## கவர்னர் கிரண்பேடி தகவல்



▶ புதுவை கனகன் ஏரியை ஆய்வு செய்த கவர்னர் கிரண்பேடி அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

**புதுச்சேரி, ஜன. 28:** புதுவை கவர்னர் கிரண்பேடி வாரந்தோறும் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் ஒவ்வொரு பகுதியாக சென்று ஆய்வு செய்து வருகிறார். கடந்த சில வாரங்களாக சனிக்கிழமைதோறும் கனகன் ஏரியை பார்வையிட்டு வருகிறார். அதன்படி, நேற்று காலையும் அங்கு சென்று, முழுவீச்சில் நடைபெறும் ஏரி புனரமைப்பு பணிகளை ஆய்வு செய்தார். மேலும், என்னென்ன பணிகள் மேற்கொள்ள வேண்டி இருக்கிறது, எந்தெந்த துறைகள் அதனை மேற்கொள்ள வேண்டும் என்பது குறித்து அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார். ஏரி பராமரிப்பை பொதுப்பணித்துறையும், குப்பைகள் அகற்றுவதை நகராட்சியும், படகு, கேண்டீனை சுற்றுலாத்துறையும், மரங்கள், புற்கள் பராமரிப்பை வனத்துறையும், வேளாண் துறையும் மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தினார்.

படகு சவாரிக்காக 2 பெடலிங் மற்றும் ஒரு துடுப்பு படகு சுற்றுலாத்துறை சார்பில் வாங்கப்பட்டு அவை ஏரியில் தயாராக வைக்கப்பட்டு இருப்பதை பார்த்தார். வரும் 3ம் தேதி முதல் படகு சவாரி தொடங்க ஏற்பாடுகள் செய்யுமாறும், ஏரி புனரமைப்பு பணியில் ஈடுபட்ட மாணவர்களுக்கு ஒரு வாரத்திற்கு இலவசமாக படகு சவாரி மேற்கொள்ளவும், துவக்க விழாவில் உள்ளூர் எம்எல்ஏ மற்றும் சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள், தன்னார்வ தொண்டு நிறுவனத்தினர், உள்ளூர் மக்கள் நலச்சங்கத்தினர், சுய உதவிக்குழுவினரை அழைக்க உத்தரவிட்டார்.

மேலும், நடைபாதை சுற்றிலும் எல்இடி விளக்குகள் அமைக்குமாறும், நடைபாதையின் ஒரு பகுதி அரசு மருத்துவக் கல்லூரி சுற்றுச்சுவரை ஒட்டி வருவதால் அந்த பகுதியில் கல்லூரி நிர்வாகமே விளக்குகள் வைக்கவும், மற்ற பகுதியில் தனியார் தொண்டு நிறுவனங்கள் உதவியுடன் மேற்கொள்ளுமாறும், ஏரி புனரமைப்பு பணிகளை, இருக்கின்ற நிதிநிலைக்கேற்ப சிறிது, சிறிதாக செய்யுமாறும் எடுத்துரைத்தார். படகு சவாரி, கேண்டீன் மூலம் கிடைக்கும் வருவாயை ஏரி புனரமைப்புக்கு பயன்படுத்துமாறு கூறினார். தொடர்ந்து அவர், ஏரியை சுற்றி அமைக்கப்பட்டுள்ள நடைபாதையில் சுமார் 2.5 கி.மீ தூரம் நடந்து சென்று பார்வையிட்டார். ஆய்வின்போது கவர்னரின் தனி செயலர் ஸ்ரீநிவாஸ், குறைதீர்க்கும் அதிகாரி பாஸ்கரன் மற்றும் சுற்றுலாத்துறை, தகவல் தொழில்நுட்பத்துறை இயக்குனர்கள், பொதுப்பணித்துறை தலைமை பொறியாளர், மின்துறை கண்காணிப்பு பொறியாளர் மற்றும் அதிகாரிகள் உடனிருந்தனர்.

Scanned by CamScanner

# கூகுள் வரைபடத்தில் பொதுக்கழிவறை கண்டறியும் வசதி: ஆணையர் தகவல்

**புதுச்சேரி, ஜன. 27:** உழவர் கரை நகராட்சி ஆணையர் ரமேஷ் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

உழவர்கரை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நகராட்சியால் பராமரிக்கப்படும் அனைத்து பொதுக்கழிப்பிடம் மற்றும் சமுதாய கழிப்பிடங்களின் இருப்பிடத்தை பொதுமக்கள் தற்போது கூகுல் வரைப்படத்தில் சுலபமாக கண்டறியும் சேவையை பொதுமக்கள் வசதிக்காக உழவர்கரை நகராட்சி ஏற்படுத்தி உள்ளது. இந்த வசதியால் பொதுமக்கள் தங்களது இயற்கை உபாதைகளை கழிக்க உழவர்கரை நகராட்சி எல்லைக்கு உட்பட்ட எந்த இடத்திலிருந்து கொண்டும் அவர்கள் இருக்கும் இடத்திற்கு அருகில் உள்ள பொதுக்கழிப்பிடத்தை அறிய அவர்களுடைய ஸ்மார்ட் போனில் *'SWACHH TOILET'* என்று ஆங்கிலத்தில் டைப் செய்து தெரிந்து கொள்ளலாம். மேலும் நகராட்சியால் பராமரிக்கப்படும் பொதுக் கழிப்பிடங்கள் எப்பொழுதும் சுத்தமாக உள்ள நிலையில் உள்ளது என்றும் தெரியப்படுத்தப்படுகிறது. இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

Scanned by CamScanner